ஓம் மாறோடிறங்கு கால்வளி ஓடிப்போக வேசுவாகா ஓம் காளி ஓம் பிடாரி ஓம் நமசிவாயநம மாரி பொழிந்து மண்குளம் பொருகி மடைதுறந்து வயல் பொருகி மடைதுறந்து வயல் பரந்த கோட்டைக்குள் ஆற்றை அரிவி அடை ஆதி அங்கம் தூள அங்கம் அடை ஆதி சுவாமியாரானை இந்திரன் தங்கை மந்திரக் கன்னி ஏளு கடல் கடந்து அக் கடல் வற ஏழுயானையின் எலும்பும் தோலும் சதையும் தின்று பெரிகிப்போற ஆற்றை புறல்காலால் மறித்தால்போல் இவள் வயிற்றில் துவாலை நீர் மறிபட்டு நிற்கவே சுவாகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிரிகை**

தலைவாழையிலையை எடுத்து கொட்டுவவங்கோலி மூன்று கம்பு மேல் எலுமிச்ச மிலை எடுத்து மஞ்சள் தெளித்து ஓதிக்கொடுத்த துவாலை சத்தி வயிற்றுப் போக்கு மறிபடும்.

**படுகளம் எழுப்பு**

ஓம் அரிஅரி நாராயணா அரிகரி புத்திரரானை எழுப்பு எழுப்பு திருப்பாக் கடல் செந்தாமரையில் பிறந்த செந்தாமரைக் கண்ணியானை அரியமாங்கலரனை எளுப்புவே சுவாகா.

**சபைக் கட்டு**

ஓம் ஆரே ஆரே வாசி வாசி நிமலி மலையாள சக்திக்குள் அம்மா பகவதி ஐவர் முகத்தை அடரக் கட்டினேன் ஆடியேன் முன்னிலையில் ஆடும் தேவி என் இடது மீசை புலி என்குரல் சிறு புலி என்னைக் கண்டபேர்கள் அஞ்சிப்பயந்து அடி தொளுது ஏற்றிய நாவும் பல்லும் உதடும் பதையாமல் கட்டினேன் என் முகம் பொன் முகமாய் நிற்கவேசுவாகா

இந்த பஞ்சாட்சர அட்சரத்தை திரு நீற்றில் சிவம் பன்னி நெற்றியிலிட்டு போகவும் ஓம் ஆம் உய்ங் வங்ங விடுக வீர பத்திராயா சறுவ சத்திராதிகளும் வய நம சிவாயநம

வேறு: ஓம் ஐயுங்கிலியும் சிறியுங் மிறியும் ஓம் நமசிவாய ஓம் நமசிவாய என் முகம் கண்ட அரசரும் மற்றும் மனிதரும் தன்முகம் போட்டு என் முகம்
கண்டு என்வசமாகவே சுவாகா.

**பக்கிளுக்கு**

ஓம் வயிரவ தேவரும் வயிர தேவியும் வருகிறாகள் இச் சத்தம் உன் சத்தம்கேளாது வளிவிட்டு விலகிப்போகவே சுவாகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவதாவி மந்திரம்

ஓம் கமு கமு சிவாயகமுறத் தெய்யனே அதப்புளா வெங் அதப்புளா வெங் வெடித்துப்பு ஆச்சிறா வெங் ஆணுவா வெங் கெயலு சூனியம் பயலு சூனியம் பட்டறப்பளயான் யேசிவாகா. திருநீறு போடச்சித்தியாம் வேறு: ஓம் அம்மே கினி கினி புத்தே கினி கினி தேவ கினி கினியே சுவாகா

## துவாலை மறிபட தண்ணீர் ஓத

ஓம் புத்த நம்பி வித்தக நயினார் வித்தகநயினார் புத்தக நயினார் ஏடு எடுத்தான் கெங்கைக் கரையாக்கன் கல்லடியான் மரவித்தன் தன்னாண ஊத்தைக் குடியன் உதிரமா காளி செப்புக் கன்னி சிலம்புக்கன்னி அம்மானைக்கன்னி கெங்கைக் காடேறி கெங்கை வயிரவா விடுவிடு தணிதணி வேசுவாகா ஓம் உக்கிற மாரிப் பிறந்து வளந்த செல்வி பரா சக்தி உன் அஸ்திரம் கொண்டு அறு அறு வீரப்பிற சண்டி வீரமா காளி உன்கை நீர் ஓதிக் கொடுக்க அங்கம் அடை அரைப் பூட்டைக்க ஆவேசி ஆவேசி சர்வகாளி ஆவேசங்கொள்ளு சுவாகா ஓம் ஐயும் கிலியும் சவ்வும் ஊன் இல்லாமல் உடை இல்லாமல் நிற்பார்களே சிவ சக்தியாணை தம்பிக்க தம்பிக்க சுவாகா

## புகை வீட்டில் பிடிக்க

வசம்பு பீ நாறிக் கட்டை குங்கிலியம் மயிலிறகு மருதோன்றி விதை நாயுரிவி பேய் விரட்டி சாம்பிரானி சமமாய் எடுத்து இடித்து வேப்பபெண்ணை விட்டு குளைத்து புகை பிடிக்க கண்ணுறு பேய் குறைபாடுகள் நீங்கும்.

## வசியம்

ஓம் சிறிங்ங மோகினி சிவமோகினி வாவா அண்டமோகினி வாவா ஆதிசக்தி மோகினிவாவா சர்வமோகினி வாவாசக்தியைக்கண்டு சதாசிவன் மேகினித்தறபோவே இன்னான் மகன் இன்னாளைக் கண்டவுடன் அவள் காம முருகி கடைஉருகி நெஞ்சுரிகி நினைவுகொண்டு உள்ளம் குளிர்து ஓடிவரவே சுவாகா

**கிரிகை**

பிள்ளையாருக்கு ஒரு மடை மோகினிக்கு ஒருமடை வைத்து முக்கோண எந்திரத்துக்குள் சு.தி.க.போட்டு அவள் கடக்க செய்து பின் உரு 108கொடுத்து இவர் ஒருவர் கட்டிக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறிக்கு திருநீறு

ஓம் கன்னியிட்ட திறு நீறு நானும் இட்டுக்கொண்டேன் மகாவிஸ்னு இருள்மேகினி வடிவம் கொண்டு வாற போது பரமசிவன் திடுக்கிட்டு எளுந்தாற்போல் இன்னாள் மகள் இன்னான் காமமுருகி கடைக்கண் உருகி நெஞ்சுருகி மனமுருகி உள்ளம் குளிர்ந்து என் பிறகே ஓடிவரவே சுவாகா.

### கிரிகை

விபூதி சித்தியாக்கி பேர் எளுதி 108 உரு கொடுத்து அணிய வசமாகும்

## முதலைக்கு

ஓம் புத்தள நாசகா புத்தள நீசகா கெங்காபரமேஸ் பாரானைத் திருக்க திருவளஞ்சி நாலு சமூத்திரத்தையும் கட்டி அடைக்கக் கட்டினேன் கொட்டவாலனை கட்டினேன் கூளாவாலனைக் கட்டினேன் கொட்டான் கையனைக்கட்டினேன் பல்லுக்கொட்டானைக் கட்டினேன் தோகைவாலனைக் கட்டினேன் உன்னையும் என்னையும் படைத்த பரமேஸ்வரனை அகலப் போதாயே அகலப்போகவே சுவாக. அந்நீர் எடுத்துத் தெளிக்கவும்.

## காடேறிவெட்டு

ஓம் மாயலோகி மந்திரலோகி வாவா நான் இட்டபொலியை உண்டு எழுஎழு ஆதிசிவன் பாதத்தில் இருப்பவளே இவன் கட்டை அறு அறு தெறி தெறி எழுப்பு எழுப்பு நான் அளைத்தேன் சிவனாணைச் செல்லு சுவாகா.

## வசியசாப நிவர்த்தி

ஓம் சர்வ சாப நாஷ நாஷ மோஷ மோஷ ஓம் விஸ்னு சாப நாஷ நாஷ மோஷ மோஷ ஓம் அனுமான் சாப நாஷ நாஷ மோஷ மோஷ ஓம் சித்தர் சாப நாஷ நாஷ மோஷ மோஷ ஓம் சூரிய சாப நாஷ நாஷ மோஷ மோஷ ஓம் அகத்தியர் சாப நாஷ நாஷ மோஷ மோஷ சிவாகா அம்மியின் நாலு மூலையிலும் மடைவைத்து பாக்கு,வெற்றிலை,பழம்,பூ தேங்காய் கற்பூரம் தீபம் கொடுத்து அரைக்கவும் ஓம் உச்சிட்ட கணபதி நமசிவ கணபதி இம்மருந்து மந்திரம் பலிக்கப் பலிக்கவே சிவமாகவே சுவாகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயிறுதடவ

ஓம் அதிசிவன் அங்கிருந்து பரமபஞ்சாச்சரத்தை உச்சரித்து சிவன்கையில் திருநீறு வாங்கினேன் மாந்தம்-18 சன்னி-18 புளு-18 டும் பூந்திறங்கி பூமியில் குதித்துப் போகவே சுவாக ஒரு கடல் இருகடல் முக்கடல் நாற்கடல் ஐங்கடல் அறுகடல் எழுகடலுக்கப்பாலே செம்பிராந்து முட்டை வைத்து குஞ்சு பொரித்து குஞ்சிக்கு இரைஎடுத்துக் கொடுக்க செமியா மாந்தம் பால் மாந்தம் புலுட்டு மாந்தம் சன்னிமந்தம் சத்தி மாந்தம் வீங்கு மாந்தம் வீங்கா மாந்தம் ஊது மாந்தம் ஊதாமாந்தம் இப்படிப்பட்ட 18மாந்தங்களும் சன்னி 18 புளு-18 பூந்திறங்கி பூமியில் குதித்துப்போவே சுவாகா. திருநீற்றால் மூன்று முறை

## வேறு

ஓம் ராம் றியும் கிறியும் அரகரா வெண்டார் அரலோக பரலோகயிலாகலோக பாதாள சேடன் கொடி முடி நடுங்க சடாச்சரி எழுந்து வருக வருக ஓம் நமறிங்ங பரம குரு கொடுத்த பாசுபத அஸ்திரம் தக தக மோது மோது அறு அறு சடாச்சரத்தோடு வரும் பாசுபதம் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ ய்யும் அங் உங் சருவ தடையும் அறு அறு இவர் சத்துருவைச் சாடு சாடு விழு விழு உறுட்டு உறுட்டு உட்சாடனமாக வதி சிவமகேஸ்வர சடாச்சரத்தோடு வரும் பாசுவதம் ஆ அலங் கலங்கு உலங்கு லங்கு இவர் சத்துருவை அரங் அரங்கு நசி நசி படு படு துட்டப்ப சாசி எச்சிப்ப சாசி விலகு விலகு ஒடு ஒடுசி வாகா-

## அக்கினி வெட்டு

ஓம் நம சிங்ங அக்கினியே அறு அறு அறு நமசிவாய அக்கினியே அறு அறு சிவலிங்க அக்கினியே அறு அறு அங் அங் சிங் சிங் யுறம் அற அற முறி முறி தெறி தெறி அத்திறா யா சிவாயாநம

ஓம்றாம் றிங்றோங் நசிம சிவசிய அக்கினியே நம அங் அங் இங் அகோர உட்சாடு அக்கிஷ சிறியும் மிறியும் சிவ சிவ அக்கினியே நம அகோர முகமே வா அங்ஙங்சி சிவாகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெட்டு

ஓம் அரி அரி காளி அட்டமா காளி திரிபுரம் கொண்டோடிவா காளி திகு திகுனக்குதி கொள்ளு சீக்கிரம் சென்று கடி கடி முறி முறி எதித்தவனைச் சங்கரி ஈரலைக் கவ்வு இரணக்குடலை மலையாய்போடு கடத்தடி கடத்தடி என்முன்னே ஓடிவா சீக்கிரம் சீக்கிரம் கள்ளிவிருட்சத்தின் கீள் வீற்றி இருப்பவளே என்னமே ஆதிசக்தி விட்டுனு சக்தி ஆங்கார சத்தி வீர சத்தி விட்டுனு சத்தி தாக்கு தாக்கு உட்சாடு உட்சாடு போடு போடு தெறி தெறி முறி முறி சிவாகா.

## காடேறி வெட்டு

ஓம் அவ்விறங் பிறதேசிவாசி ஆகாசத்திடமாய் இருந்து பிறப்பிட்டு வாறாள் என்னம்மை ஆதி காடேறி வாடி பேய் பிசாசு பில்லி வஞ்சனை சூனியம் எரியத்தடை எரிய தடுத்தவனைச் சீக்கிரம் சென்று தாக்கிவா கடேறி தெறி தெறி முறி முறி மோது மோது சிவாகா.

## வேறு

ஓம் ஆம் சிறியும் கிறியும் காடேறியே வாவா ஓம் நசிநசி நங்ங றங்ங நங்ங றங்ங் அறஅற ஆவேசு ஆவேசு உச்சாடு உச்சாடு உருளு பிரளு எக்கலாதேவி உதிரம் வாங்கடி காடேறி சென்றவன் உயிரை பிடி பிடி பிடித்தால் விடாதே மருதவீரி மந்திரக்காடேறி காலாக்கினி உதிரஓங்காரி உதிரம் குடித்திடு உலகாகிக்கி சுடு காட்டுவீரி சுடலை வைரவி ஆரேவேச்சி வீரமல்லாகி வீரிச்சி வீரஉச் சண்ட தலச்சி வம்மக்காவல்லி முடுக்கடி முடுக்கு முத்தில்லாதேவி சங்கு சக்கரத்தை ஆள்வாய்தாயே வாவா என்வாக்கிலும் மனதிலும் வந்து நின்றுவிடு விளையாடவே என்னை வைத்தாய் கொள்ளைக்காறி கூப்பிட்டால் ஓடிவா உன்னை நான் கூப்பிட்டு உதிரமும் சோறும் தாறேன் இரணியனை இரு பிளவாய் பிளந்த மாதேவி சேட்டைக் காரரை திடுக்கனத்துணிந்த வஞ்சகத்தி பாலனைத்திண்ட பறச்சிவம்மக்காதேவி தும் தும் அற அற ஆவே சுஆவேசு சுவாகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலதுக்கும் விலக்கு மந்திரம்

ஓம் சன்னியா நமோ கறுத்த சிகப்பாணியா இலங்கை போசனமூர்த்தி உருத்திர ஆசனம் திருலோக புவலோக இந்திரர் சுவாகா இவர் பேரில் வரப்பட்ட எட்டப்பட்ட வைரவரும் இருளன் மருளன் எரித்த ஏழு கரையாக்கன் ஏழு குறும்பறையன் வட்டக்கரையாக்கன் தொட்டசங்கு பாலகர் தனிப்பள தேவதாவி தனிப்பள தேவதாவா இருளதேவதாவா மருளதேவதாவா கிரி தேவதாவா நீங்கள் எல்லோருக்கும் என் முகம் கண்டவுடன் விலகு உன் குருக்கள்காள முனியாணை விலகு ஆ-ஈ-ஊ-ஏ-ஐ என்று ஐந்தொழுத்தப் பஞ்சாச்சரத்திலாணை இவரை விட்டுவிலகிப்போகவே சுவாகா தண்ணீர் சொரியலாம் மடைவைத்தும் கழிக்கலாம்.

## காடேறிவெட்டு

ஓம் உக்கிற காடேறி உச்சண்ட சண்டாளி உதிரப்பிணம் தின்னி உன்மத்தகாடேறி சீக்கிரம் சீக்கிரம் வாவா தாக்கு சல்லடமும் கங்காள வேஷமும் கறடி வாகனமும் சென்னாய் முகமும் விரித்த சடையும் வெண்புலித் தோல் ஆசனமும் கையில் காபால பாத்திரமும் தாங்கி கள்ளிமரத்தின் கீழ் சாய்ந்திருப்பாள் என் அம்மை ஆதிகாடேறி சறுவ சங்காரி வாவா சகல தடைகளும் அறுபட்டுபோகவே சுவாகா

## ஆடாதபேய்களை ஆட்ட

ஓம் பகவதி ஆம் பகவதி ஆதிபகவதி ஆடாாத பேய்களை ஆட்டும் பகவதி ஓடாதபேய்களை ஓட்டும் பகவதி சுவாகா என்றுவா சொல்லி தெய்வம் ஆடாதவர்களுக்கும் இம்மந்திரம் சொல்லி தலையில் தண்ணீர் சொரிய ஆடாதபேய்களும் ஆடும்

## வராக பூசை மூலமந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹரி ஹரி சக்கரம் திரிபுரம் சக்கரம் ஓம் பத்திரகாளி சத்துரு சங்ஙாரி மகுட சூர மர்த்தனி ஐயம் கிலியும் ரிம் படு சுவாஹா 108 தடவை உச்சரிக்க சகலதும் சித்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயம்தெளிய விபூதி பிடிக்க

சிசு அந்தி சந்தி நேரத்தில் பயந்திருந்தால் சீர் அள பேய் பிசாசு சேட்டையில் பல வித தோஷத்தில் பார்த்திருந்தால் ஓர் தாம்பளத்தில் விபூதி வைத்து ந-ம-

சி-வா-ய என்ற அட்சரத்தை உச்சரித்து ஆக்குற உச்சாடு பால தேவதா சகல கிரகங்களும் உன்பேரை சென்னவுடன் சறுவபூத பசாசுகளும் ஓடப்பா ஐயனே என்று கொக்கரித்து ஐயும் கிலியும் சவ்வும் மாலாமணி சவ்வும் கிலியும் ஐயும் மாலாமணி சவ்வும் கலாமணி நான் நினைத்த காரியத்துக்கு வந்து நில் சுவாகா என்று 108தடவை செபித்து விபூதியை சிசுவாயில் தடவி சிரசுமேல் தெளித்து நெற்றியில் அணிய சகல வியாதிகளும் நிவர்ததியாகும் செபிக்கும் போது கற்பூரம் நிற்காமல் கொழுத்திக் கொண்டு வரவும்.

## சிசுக்களுக்கு வேப்பிலை அடிக்க

மூன்று கினறு நீரைக்கொண்டு வந்து விபூதி போட்டு அந்த சலத்தை வேப்பிலையில் தோய்த்து ஓம்-நம்-சிவாயா என்று குழந்தைகளுக்கு மந்திரித்து அடிக்க சகல தோஷங்களும் நிவர்த்தியாகும்.

எலுமிச்சம் பழம் ஊமந்தம்காய் ஆட்டுதுப்பட்டிக்காய் இவைகளை சுற்றிப்போடவும் இப்படி ஏழு நாள் செய்யவும் எட்டாம் நாள் இரவு குழந்தையின் தலையணடை ஒரு தேங்காயை குடும்பியுடன் உரித்து துவாரம் செய்து அதில் நவதானியம் மூன்று கண்களில் கற்பூரம் வைத்து கொளுத்தி குழந்தையை சுற்றி மூன்றாம் சந்தியில் உடைக்க சகல தோஷங்களும் நீங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்திரீ வசியமை

தொட்டாவாரிவேர் புல்லாமணக்குவேர் தலைச்சுருளிவேர் வெள்ளை நீர்முள்ளிவேர் வெள்ளை கண்டல் கத்தரிவேர் பாதிரிவேர் புன்னைவேர் கொழிஞ்சிவேர் இவைகளை முறைப்படி காப்புக்கட்டி சாபம் போக்கி ஆணிவேர் அறாமல் வெட்டி எடுத்துக்கொண்டு தீயில் கறுக்க வைத்துக்கொள்ளவேண்டும் புனுகு கோரோசனை பச்பைக் கற்பூரம் குங்குமப்பூ கஸ்தூரிஇலைகளை வகைக் குண்டுமணி இடை எடுத்து மேற்கண்ட வேருடன் சேர்த்து கவத்திலிட்டு களஞ்சிவிரை தையிலம்விட்டு இரண்டு ஜாமம் அரைத்து கொம்பு சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

## இதற்கு பூசைமந்திரம்

ஓம் ஹரிம் நமோ பகவதி ஸர்வஜன மனோகரி பநி புரச வசங்கரி க்கிலிம் க்கிலிம் மம வசம் குரு குரு ஸ்சுவாகா இம் மந்திரத்தை பதினெரு தினம் செபம் செய்ய வேண்டும் தினம் 1008உரு வீதம் செபம் செய்தால் மை உயிர் பெறும் வேண்டும் போது நெற்றியில் திலகமிட்டுச் செல்ல தன்னைக்கானும் பெண்களுக்கு ஒருவித அன்பு தன்னை அறியாமலே ஏற்படும் நம்மோடு பழக ஆசைப்படுவார்கள் பிறருக்கும் செய்து கொடுக்கலாம் அவர்களுக்கும் அந்த வசிய சக்தி ஏற்படும் ஆனால் இளம் பெண்களைக் கெடுப்பது தவறாகும் என்பதை அறிந்து செய்யவும்.

## ஆடு வெட்டி பெலி கொடுக்க மந்திரம்.

ஓம் அதிரூபகாளி அட்சர வாகினி அலறிய வாயும் முறிகிய சடையும் முளித்த முனியும் முப்புரமெறிய இவ்வுலொகங்கள் கிடு கிடு றென்றட இரண மத்தளம் துந்துமி முளங்க எளும்பிவாருள் பெலியைக் குடிக்க வென்று கனகளமேறிவாருள் கையில் காபால சூலமும் களுத்தில் மாங்கல்யமும் முத்தபரணமும் குத்து முலையும் குமிர்குமிர்ரென குதித்துவருள் சிவலிங்கரூபி கூந்தள் அவிள்ந்து குலைந்து விளவே கொண்டைபணி விள நின்று வாவ்ங்வாருள் வாருதலெட்சுமி, வருதகாளி, ஆடு அஞ்சும் பொலிதந்தேன் ஆகாசம் பூமி அதிராமல் வாங்கம்மா வாங்கு வாங்கு சுவாகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கும்பம் தம்பிக்க மந்திரம்.

ஓம் அவ்வும் உவ்வும் மவ்வும் பகவதே தம்பே ஆகாசம் தம்பே இமயதக்கினி வாசி மண்டலி தம்பே ஆதிசேடன் உலகை மூடினர் போலே இவர் தலையில் கும்பம் தம்பித்து தம்பித்து நிலைகுலையாமல் நிற்க நிற்க வேசுவாகா ஓம் விறும தம்பனம் விஸ்னுதம்பனம் வாசிதம்பே பேசிவதம்பே தம்பிக்க தம்பிக்க திருவம்பலம் முடையார் திருவாணைத்தம்பே தம்பேசுவாகா ஓம் தெய்வ தட்டு ஓட்டு சிவதட்டு தட்டு சிவனுடைய திருப்பாதத்தில் திருச்சிலம்பு ஒட்டிளுர் போலே ஓட்டு ஓட்டவேசுவாகா ஓம் அவ்வொட்டு நவ்வொட்டு எலும்பொட்டு தசைஓட்டு சறுவாக்கிஷம் ஓட்டு ஒட்டவேசுவாகா

### விஸ்னு பூசைவிதி

அச்சுதாயாநம கேசவாயா நம நாராயணாயநம மாதவாயநம வேதி விதந்தாயநம விட்னுவே நம மதிசுதாய நம திறிவிக்கிறிமாநம அரந்தாயா நம வாம்மையாநம தாமோதராயநம ஆகபாகன அபினேக அலங்பார அரசன் அரயே பாதிய ஆசனம் சோடசயுவசரா பூசாஞ்ச மாபயா மீ

### வசியத்திற்கு எண்ணை வகை

| | |
|---|---|
| நல்லெண்ணை - மோகனம் | வசியம் - (யநமசிவ) |
| ஏரண்எண்ணை - ஆக்கிரோசம் | மோகனம் - (மசிவயந) |
| ஆவின் நெய் - வசியத்திக்கு | தம்பனம் - (நமசிவய) |
| வேப்பெண்ணை - மரணம் | உச்சாடனம் - (வயநமசி) |
| புஸ்கெண்ணை - உச்சாடம் | மாரணம் - (சிவயநம) |
| புன்தனை எண்ணை - பேதனம் | பேதனம் - (யவசிநம) |
| ஆதனை எண்ணை - தாம்பத்தியம் | ஆக்கிரதை - (வசிமயந) |
| | வித்து - (நயவசிம) |

மேதி ஆடு பன்றி விந்துவேஷறைம் கர்மத்துக்கு கள்ளி எருக்கு எட்டி அத்தி இத்தி விடத்தல்கள் சுபபாவகர்மத்துக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளசிச்செடிக்கு வியாழக்கிழமை பொங்கலிட்டு காப்புக்கட்டி தூபம் கொடுத்து குளிசமாடி கட்டிக்கொள்ள வியாழன் வசியமாவான் இதே மாதிரி அனைத்திற்கும் செய்யவும்.

சுக்கிரன் வசியம்: குடியோட்டிப் பூண்டு வெள்ளிக்கிழமை காப்பு

காளியம்மன் வசியம்: வெள்ளைக்குண்டு மணி வெள்ளிக்கிழமை வேர்குளிசமாடி

சரஸ்வதிக்கு: சென்பகச்செடிக்கு சனிவாரம் சூரிய உதயதுக்கு காப்புக்கட்டி பிடிங்கிகொள்ளவும்

வைரவர் வசியம்: வில்வமரத்துக்கு காப்பிட்டு வேரை வெள்ளிக்கிழமையன்று

அஞ்சனமா தேவி: கொன்றை மரத்திற்கு ஆதி வாரம் வேர் பிடுங்கி

அகோர வீரபத்திரனுக்கு: இருவெலி வேர் பிடுங்கி கட்டிக் கொள்ள

குறளிக்கு வசியம்: ஊமத்தை செடிக்கு ஆதிவாரம் திங்கட்கிழமை மஞ்சள் நூல் காப்பு கட்டி பொங்கல் பலி கொடுக்க வேர்பிருங்க

லட்சுமி வசியம்: மஞ்சன் செடிக்கு வடவேர்காப்புக்கட்டி வெள்ளிக்கிழமை காப்புக்கட்டி தீப தூபங்கள் கொடுத்து லட்சுமியை மனதில் தியானித்து அஷ்டமாகாமந்திரத்தை மனதில் வைத்து இடைவிடாது லட்சம் உருக்கொடுத்து வேரை எடுத்துக் கொள்ளவும்.

புருடவசியம்: குண்டுமணிச் செடிக்கு சோமவாரம் பருகுவதும் கூடிய சுப முகூர்த்தத்தில் மஞ்சள் நூல் காப்பு வேரை மோகினி மந்திரத்தால் உருக்கொடுத்து எடுத்துக்கட்டிக்கொள்ளவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்த்திரி வசியம்: கீழ்க்காய் நெல்லிக்கு வெள்ளிக்கிழமை காலை மஞ்சள் நூல் கட்டி மறுவெள்ளி சூரிய உதயத்திற்கு முன் வேர் பிடுங்க குளிச்சமாடி ஜங்காயம் சேர்த்துக் கட்டிக்கொள்ள வசியமாகும்

வீக்கத்துக்கு: பனம்பூ, தேங்காய்மட்டை, பீச்சுவிளாத்தி, குப்பைமேனி குப்பிளா, வண்ணான் அவரி இவைகளை சமமாக தறித்து பானையில் போட்டு அவித்து குளிப்பாட்டட துளசி அவித்துக் குடிக்கவும்.

## மூலிகைக்கு காப்புக்கட்டிப் பிடுங்க

ஓம் வச்சிரரூபத்தமாக இருக்கவேசுவாகா ஓம் நிலத்தில் முளைத்தவனே நிலப்பூப்பூத்தோனே மண்டு சிறைகாத்தவனே மகா காளி மண்னே உன்னை நான் நினைத்தேன் திருமாள் பள்ளிகொண்டகடல் என்கையாகவும் தேசம் கயிறாகவும் கொண்டேன் என்கை பொன்கை எதிரிகை வெறுங்கையாகவே சுவாகா விஷ்கிராந்தி செவம் பண்ணிக்கொண்டுபோக சபைவெல்லும்.

## சன்னத மேத்த

ஓம்யுட்டகண்ட அவுதாரயீசா யீசா அவுண வந்து பேயாண்டநயினார் தேவநயினார் ராணைத்திருவேறப்பா திருவேறு உருவேறப்பா உருவேறு ஓம் சூல மந்திர ரூப வேத காரணி சுடு சுடு எரி எரி ய வேசுவாகா. திருநீறு போடப் பேசும்.

## காடு கூவெண்ண

ஓம் அக்கிடா மலையில் இருக்கும் அகத்திய மாமுனிபபெருமாள் நான் தான் வருகிறேன் வழிவிட்டு விலகிப்போகவே சுவாகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஸ்ணு பகவான் கட்டு

ஓம் பவபவ பரமகவுஷம் பாதாளம் போனால் பாதாள வைரவனையும் பரமேஸ்வரியும் விட்டு ஐந்தெழுத்தைச் சொல்லிக்கட்டினேன் பக்கத்தே போனால் பரமேஸ்வரனையும் விட்டு ஆறெழுத்தைச் சொல்லிக்கட்டினேன் மேகாந்தம் போனால் மேகவயிரவனையும் மேகராசனையும் விட்டு நாகபாஷத்தால் கட்டினேன் ஆகாசம் போனால் ஆகாசவைரவனையும் அனுமந்தனையும் விட்டு அனுமந்த கவுசத்தால் கட்டினேன் என்கட்டும் என்குருநாதர் கட்டு பாதாதி பாதம் கேசாதி பாதம் விநாயகர் விச்சூருடம் அறிங்ஙமங்ங சிங்ங சத்தி விஷ்ணுகவுசாயாகட்டு.

## நரசிங்கன் வெட்டு

ஓம் அரி அரி சிறி கெருடநாராயன சுவாமி நரசிங்கரூபம் கொண்டு இரணியனை இரு பிளப்பாய் பிளந்து மணிக்குடலை வாங்கியது போல் என்னோடு எதுத்த சத்திராதிமேல் சென்று மார்வைப்பிளந்து வவ்வு வவ்வு சீக்கிரம் சீக்கிரம் உட்சாடனம் மாறனம் பேதனம் தம்பனம் மோதனம் ஆகி இருட்டனம் அங்கம் பசாசி ஏவினவனை மேலே சென்று தாக்கு தாக்கு திரிபுரதகனமாக சிவன் திரிபுரம் எரித்தால் போலே சென்றவனை உயிரை வவ்வு வவ்வு மண்டு மண்டு சறுவ தடையையும் எரி எரி பொரி பொரி முறி முறி அறு அறு அக்கினிச்சூலமதாய் மாறு மாறு நரசிங்கா மாறணம் பண்னு பண்னு ஆசி ஆசி கல்லிடு தீயிடு பக்கறு பக்கறு பகையறு வில்பூட்டாயினும் வெட்டு வெட்டு அண்ட ரெண்டங்களும் கண்ட துண்டங்களும் வெட்டினேன் நரசிங்கா கவ்வு கவ்வு வவ்வு வவ்வு அவனைச் சென்று வவ்வு நரசிங்கா வா வந்து வெட்டு வெட்டு சுட்டெரி சுட்டெரி மாறு மாறு எரி முறி தெறி பட்டுப் போகவே சுவாகா!

## - நீலி வெட்டு -

ஓம் வராகி வராகி யோகி யோகி குண குண காளி காளி மாலங்கி மாலங்கி நீலி நீலி நீலகண்டன் வாறான் சுலுப்பு சுலுப்பு அல்லாக்கு சுலுப்பு மட மட துரு துரு பிடி பிடியம்மா தாயே பிடித்தாலும் உருவைப்பிடி அறு அறு அறவே சுவாகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுரைவீரன் வெட்டு

ஓம் மால சால உப்புருகிமா மட்டுப்படாத மதுரை வீரா ஆருக்கும் அடங்காதவனே எளுந்திரு எளுந்திரு இடக்கையில் மாட்டுச்சுரியும் வலதுகையில் மச்சக்காவடியும் இடது தோளிலே செருப்புத்தைக்கும் சுற்றிளியும் வலது தோளிலே தண்ணிருமாக கரும் குருவி மீதேறி வாவா வீரமுண்டாயா அவன் முதுகை அறுத்து அறுத்து ஆவேசமாக்கி எனக்கு எதித்த சத்திராதிகளை சீக்கிரம் சீக்கிரம் போடு போடவே சுவாகா!

## மண்ணுளிவயிரவன் வெட்டு

ஓம் மண்ணுளிவயிரவா வாவா வவ்வ வவ்வ மண்ணுளி மயா மண்ணுளி அர அர மண்ணுளி அவ்வு மண்ணுளி ஆகாச மண்ணுளி ஆ, ஈ என் முன் நில் என்செறகோள் உன் உரை என்னுரை உன்பகை என்பகை நீ எப் பொலி கேட்பினும் அப்பொலி நான் தருவேன் ஏகாந்த மண்ணுளி என் சத்திராதியின் மேலே சென்று அவன் அடி மணர்ந்து அடி அடி பிடி பிடி அவன் இரத்தம் குடித்திடு மண்ணுளி அவன் ஈரலைப்பிடுங்கி குலாவிவா மண்ணுளி அவன் தசையை கிழித்து தாதா மண்ணுளி அவன் எத்தடை செய்தாலும் அத்தடையை நீ கிழித்து அன்று புரம் எரித்து அம்பு பாய்ந்தாற்போலே பாய் பாய் ஏறு ஏறு அரன்ரூபமாய் அறு அறு முறி முறி தெறி தெறி சர்வ தடைகளும் அறுபட்டுப்போகவே சுவாகா

## முருகன் வெட்டு

ஓம் சிறியும் மிறியும் கிலியும் கிலியும் சரவண சன்முகாயா சாடு சாடு சங்கரி சங்கரி சிரித்தவாயும் விரித்த சடையும் சென்னிற முகமும் பன்னிரு கண்ணும் அகண்டமார்வும் இருண்ட கண்ணும் அக்கினிக்கண்ணால் அனல் மழைபொழிய உக்கி சங்காரம் செய்தபோது சக்கரவாழும் போலே வளைத்துக் காட்டிய மாயா பாசத்தை சங்கரிக்க வென்று உன் தாயார் தந்த உக்கி ர வீரசக்திவேலை கையிலேந்தி ஓம் மவ்வும் நவ்வும் சிறியும் மிறியும் கிலியும் சிங்ங வங்ங நசி நசி என்று சங்கரித்தால் போலே சாடு சாடு சங்ஙரி சங்ஙரி சத்துருவானவன் தன்முகம் நோக்கி அவன் புத்தியளித்து புலனைக் கொடுத்திடு எத்தி இழுத்துப்பிடுங்கிடு சக்தி வேல்விட்டு தாரகன் மார்பை பிளந்தால் போல் அவன் நெஞ்சைப் பிளந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிணக்குடலை வாங்கிடு சறுவ வங்ங அங்ங வங்ங வங்ங அங்ங ரங்ங சண்முகாயா சாடு சாடு சாரு பசி வலிங்க நம சிவத்தினாணை சறுவ பேய் பிசாசி பில்லிசூனியங்களை சங்கரி சங்கரி எரி எரி படு படு சுவாகா!

முருகையன் அட்சரம்



## கால வயிரவர் வெட்டு

ஓம் கடு குடு தேவதாவா இறணப் பெசிமாடா கம்பிளி வைரவா நீ ஒரு கால் கீளும் ஒரு கால் மேலுமாக நின்று அரிய தவம் செய்கின்ற போது ஆதிபர மேஸ்வரனும் ஆதிபரமேஸ்வரியும் வந்து உனக்கென்ன வரம் வேணுமெனக் கேட்கின்ற போது கட்டி இருக்கிறான் கவலைப்படுகிறேன் கட்டை விடு விடு கால வயிரவா கிட்டிப்பார் கிரணங்க வயிரவா உதிரப்பெலி உடனே தருகிறேன் இரத்தப் பெலி இப்போ தருகிறேன் சிறி முக வயிரவா செல்லு செல்லு சிவனாணைச் செல்லு சிவ சக்தியாணை தாக்குகளுத்தால் ரெத்தம் கமுக்கென பாய மூக்கால் ரெத்தம் முத்துப் போல் ஓட நெஞ்சத்தால் ரெத்தம் நீரிட்டோட விட்டு விடாதே சிறிமுக வயிரவா அடி அடி பிடி பிடி சிவ சக்தி அம்மையாணை தடையற முறிய வேசுவாகா

ஒத்தக் காலில் நின்று சிவம் பண்ணி வெட்டவும்.

## காளி வெட்டு

ஓம் ஏறடி ஏறடி எதி ரேறடி காமக் கோலம் கபால பாத்திரம் நீண்ட சடையும் நெருப்பெறிந்த முகமும் ஒற்றைத் தோடும் ஒரு கையில் சூலமும் இரண்டு கடவாயில் இரத்தவாடையும் சேத்து மித்து தாழ்திறந் தோடி வா வவ்வு வவ்வு வட பத்திர காளி பாஞ்சி றாஞ்சடி பாஞ்சிறாஞ்சடி பாரப்பெலி எடு ஆயீ அண்டம் பிளந்து வா ஆகாசம் பிளந்துவா பூமி கிழித்துவா பூலோகம் கிழித்து தன தனத்த வால சவுந்தரி பெலி எடு பெலி எடு பேதம் எண்ணாதே பொய் சொல்லாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதம் இல்லாமல் தடைபிரண்டோடிவா காளி வெள்ளியவ்கிரிமலை விடிந்து வெண்சாவல் கூவுதுதே ரேறிவா சிங்கவாகினி வங்ங வங்ங வட பத்திரகாளி சீக்கிரம் சீக்கிரம் தடையற முறிய வேதவாகா

## ஆதித்தன் கக்கிஷம்

ஓம் ஆதித்தன் கக்கிஷம் ரெத்த பூசணம் சகல பிற தோஷமும் சகல கக்கிஷ நிவாறணம் நிவாறணம் மகா வேசுவாகா ஓம் அரி அரி கக்கிஷம் ஆயித்தியம் கக்கிஷம் இவர் பெயர் சொல்லிய கக்கிஷம் இவர் பெயரை அடைக்கிச் சுட்ட கக்கிஷம் அருகுசம் ஓரெழுத்துப் பட்டி யிந்தாலும் விடு விடு கக்கிஷம் இவர் வினை அத்தனையும் அறு அறுக க்கிஷம் ஆதிபரமேஸ்பரனுக்கு ஆதிபரமேஸ்வரி அபிஷேகம் பண்ணி அறுத்தாப் போலே இவர் வினை அத்தனையும் அறுந்து போகவே சுவாகா ஓம் றாவ்கு றிவ்க கெந்தக சூரியாயா நம ஓம் சந்திர பகவானே நம எந்தவினை இருந்தாலும் இவரைவிட்டு அப்பாலை போகவே சுவாகா

## மீன் அளைப்பு

ஓம் வயிரவா ஓங்கார வயிரவா அக்கடல் மச்சங்கலெல்லாம் கடலில் விரயக் கொண்டுவா வயிரவா அவன் வலையில் மச்சகலெல்லாம் பின் செல்லாது முன்னுக்கு கொண்டு வா நான் நினைத்தபடி படு படு படு என்னை மறவாதே எதிரிசொல் கேளாதே வயிரவா வருக வருக சக்தி வயிரவா ஓம் றிவ் படு படு சிவாகா

ஓம் ஆம் பரம சங்காரி பாதாள யோகி வருக மச்ரூபி வருக மாரிய முரளி வருக விச்சக வீரி வாகினி வருக அவ்குச மச்ச ரூபி திருப்பாக்கடலில் சிறுகடல் தேடி வருக வருக வேசுவாகா

ஓம் ஆம் இரு காடு சுடு காடு சுடு கட்டிலே பிறந்த வயிரவா நான் உனக்கு அடிமை நீ என் முன் நில் நான் சொல்லுவதைக் கேட்கற் சுவாகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியோம் தென் கடல் வட கடல் நீர்க் கடல் அக்கினிக் கடல் இந்தக்கடலில் கிடக்கும் பிலால் மச்சங்கள் மீன்கலெல்லாம் அளைத்துவா வயிரவா இந்திர மேகம் போல் சண்முகம் மேகம் போல துற்கையாக வா வா துற்கை பரமேஸ்வரி போல வா வா இந்தப் பார்கடலில் பிறந்த மீன்கலெல்லாம் அளைத்து வா வயிரவா இறும்பு வயிரவா சுடலை வயிரவா நான்குறித்த வலையில் பட்டுப்பிணமாக கரையேற பேசுவாகா

## மாரி அம்மன் வெட்டு

ஓம் சீட்டி வாட்டி மாதங்கி தெல்ல மாதங்கி லீலா ஒட்டித் தாக்கி மாளுமங்கி விருமா விட்ணு தங்கை திரைசேரம்மை ஏகு ஏகு ஓம் சிவாயா சிவனுக்கும் உமைக்கும் அகோரம் விட்டாப் போலே என்நோ டெதிர்த்த சத்திராதி சென்டேறித் தாக்கு றிம்றிம் ஐயும் கிலியும் சவ்வும் கிலியும் கண் முளி சிதறிட அகோர மாரி அம்மா முத்தெறி கண்ணி கமுகம் பாலை எடுத்து உருப்பண்னி தலைக்கு மேல் வைத்து கத்தியால் குத்தவும்.

## வராகி வெட்டு

ஓம் சத்தி வருக சதாசிவம் வருக வருக ஆரேவர அருகே வா றிங்ஙா சணத்தி இயமனை அளைத்து பாங்காம இயமனை பதக்கக் குத்து சலத்தை முறுக்கு வலத்தை வாங்கு என்னமோ வராகி இயக்கு மயக்கு சத்தானை நீட்டி தராகு கேது திசை கெட்டு நடந்தாப் போலே மண்மத பாணம் பட்டு வண சூரண் பட்டாப் போலே சிவ சிவா சுட்டறு தாயே கட்டறு அம்மா கட்டறு கட்டறு.

## குறவி வெட்டு

ஓம் குறவி ஓங்கார குறவி சிறுகுறவி சிவ சங்ஙார குறவி வா வா குறவி வந்து பிடி பிடி குறவி அடி அடி குறவி ஆங்ஙார கெனுவி கோல கால யசுபராயா ஓட்டென்றாங் வெட்டு உன் வீரவான் கொண்று வெட்டி நேன் வெட்டற் முவியவே சுபாகா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காடேறு வெட்டு

ஓம் அகோர காடேறி வாவா மோகாம் புரி இருட்டுக் கடலில் எழுந்தருளி வாற பவணியை பார் பார் காதிலிட்ட கவிஷ குண்டலமும் கங்காள வேஷமும் சென்றாய் முகமும் கருநாய் வாகனமும் மாநொரு கையும் மளு வொரு கையும் வில் ஒரு கையும் வேல் ஒரு கையும் சிவந்த மேனியும் செம்பரத்திப் பூ ஆடையும் நெருப்பு முகமும் இரும்புத் தடியும் ஏறிட்ட பார்வையும் ஏகாந்த சல்லடமும் காலிலிட்ட வீரச் சிலம்பும் வைதீக மாலையும் சற்றே சிறித்த முகமும் செம்பரத்தம் பூ ஆடையும் இப்படி இருப்பாள் எங்கள் ஆதி காடேறி யம்மை பக்க வைரவன் பத்து தளையாட பத்திர காளி அம்மை தாயே என்னைக்கார் என்னொடெதிர்த்த சத்தி ராதியைச் சங்ஙரி சங்ஙரி சீக்கிரம் சீக்கிரம் சுவாக.

## அக்கினி பஞ்சாட்சரம் பூசணிகாய் வெட்டு

ஓம் அரகர சிவ சிவ அக்கினி நீறு மூல நடன மகேஸ்வரா ஆதி மூலமே விடவாமுக பாஷ பாணியே வா வா எக்கிஷ பிரயை கால அணலோணே ஏறு ஏறு எரி எரி சுட்டெரி சுட்டெரி குபிலிங்ங குபிலிங்ங கபில அணலோ ஆதி திருட்டியானை சங்ஙரி சங்ஙரி எரி எரி நசி நசி மசி மசி அங்கே அங்கே வடவைக் கனலை வாரி இறைத்துச் சுடு சுடு தகி தகி தகன தகன மாக எதிரேறு எதிரேறு சாம்ப சிவ மூர்த்தியானை எனது சத்தியின் பேரிலே அகோரம் விடு அகோரம் விடு அறுவுருகப் பிரளைய கால அக்கினி ஆவேசு ஆவேசு சுவாகா.




**முறை:- நிலத்தில் அச்சரம் கீறி பூசணிக்காய் மேல் வைத்து சிவம் பண்ணி வெட்டவும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காண்டீப அஸ்திரம் 5ம் குத்து

அரி ஓம் நமோ நம சிவாய நம. நமசிவாயத்தின் மேலான அக்கினியின் மேல் நின்று அருச்சுனன் காண்டீப அஸ்திரம் பெற அரிய தவம் புரிய சிவன் கண்டு திகைத்து என்ன வரம் வேனுமென்று கேட்க காண்டீபம் வேனுமென்று சிவன் விடை கொடுக்க இக்கனம் தெய்வ லோகம் சென்று காண்டீப அஸ்திரம் பெற்று வரும் வழியிலே காண்டா மிருகம் அடிபட்டு வெருண்டோட காண்டீப அஸ்திரத்தை ஓம் ஆம் என சொல்லி தியானித்து நான் ஏற்ற ஈரேளு பதிநான்கு லோகங்களும் நடு நடுங்க பதின் எட்டு திக்குகளும் பொறிபறக்க அட்டபாலர்களும் திகைத்து நிற்க தேவாதி தேவர்களும் நடு நடுங்க கௌரவப்படைகள் கதிகளங்கி வெருண்டோட கர்ணன் கை நாகபாஷம் நாணறுந்துபோக நாக பாஷத்தை முறித்தெறிய கர்ணன் திகைத்து நிற்க வருகிறது காண்டீப அஸ்திரம் கோடா கோடி பேய்களைப் பிளந்து தெறிந்து வருகிறது. காண்டீபம் காளமாமுனி கண்டு முன்னும் பின்னும் ஓட ஆண்பேய் பெண்பேய்களை சிறமறிந்து நெருப்புத் தனல் எழுப்ப வருகிறது. காண்டீப அஸ்திரம் பூ ஓதி எறிந்ததுவும், ஆணி ஓதி அடித்ததுவும், சுடலைச்சாம்பல் ஓதி எறிந்ததுவும், தோஷங்கள் விட்டதுவும் மண் ஓதி எறிந்ததுவும், கல் ஓதி எறிந்ததுவும், நெல் ஓதி எறிந்ததுவும், உப்பு ஓதி எறிந்ததுவும், கடுகு ஓதி எறிந்ததுவும், மிளகு ஓதி எறிந்ததுவும், வெட்டு வெட்டு, குத்து குத்து, உருட்டு உருட்டு, மோது மோது, காண்டீப அஸ்திரமே காளி காடேறி ரெத்த வைரவன், அக்கினி வைரவன், சுடலை மாடன், உக்கிர வீரபத்திரன், பக்த்த அனுமான், பலராமன், சிறிராமன் மாடன் காடன் கிங்கிலியன் வரும் பெரும் பூதம் இவர்களை கொண்டு கட்ட நாளும் எண்ணுக்கடங்காத கட்டுகளும் பிளந்தெறிந்து போக வைத்த பில்லி வஞ்சனை சூணியங்கலெள்ளாம் சிதற அடித்து வருகிறது காண்டீபம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவன் சீவன் அதற அதற பதறப் பதற போடு போடு தடுத்தவன் கண்வெடிக்கக் குத்து குத்து காண்டீப அஸ்திரம் தக தகவென்று நெருப்பு மலை பொழிந்து வருகிறது ஆடும் பேய் பாடும் பேய் ஆளைப் பெலி கொள்ளும் ரெத்தக் காடேறி உதிரமாடன் வட்டக் குறும்பறையன் தொட்டக் குறும்பறையன் இவர்களைப் பிடித்து சாம்பளாக்கி வஞ்சனை பில்லி சூனியம் பிழந்தறிந்து போ செய்தவன் பெண்டி தாளி அறுந்து போகவே சுவாகா.

கடைசிக்கட்டத்தில் மட்டும் வெட்டவும்


எந்திரம் இதோ




## நரசிங்கன் வெட்டு

ஓம் ஆதிநாராயண சுவாமி நரசிங்க ரூபங்கொண்டு இரணியனைப் பிழந்து இரணக் குடல் வாங்கினாப் போலே என் சத்திராதி மேலே சென்று ஈரலைக் குத்து இரத்தம் குடி இரக்கம் பாராதே தயங்காதே மயங்காதே ஏறு ஏறு என் ஆதி நரசிங்கா என் அப்பனே இவர் மேல் வரப்பட்ட பில்லி வஞ்சனை சூனியங்களும் சர்வ தடைகளும் அறுபட்டுப் போகவே சுவாகா.

நரசிங்கன் எந்திரம்




## மோகினி வசிய பூசை முறைகள்

பூசைசெய்பவரின் பிறந்த நட்சதத்திரம் வரும் செவ்வாய்க்கிழமை அன்று இரவு 11மணிக்கு பூசை ஆரம்பித்து நள்ளிரவு 2.10க்கு முடிக்க வேண்டும் அடுத்த செய்வாய்க்கிழமையும் அதேபோல் பூசை செய்ய வேண்டும் இப்படி ஒன்பது செவ்வாய்கிழமையும் பூசை முடிக்க பத்தாவது நாள் மோகினி வசியம் சித்தி ஏற்படும் பூசை செய்ய வேண்டிய செவ்வாய் கிழமை நீராடி வெள்ளை வஸ்திரம் தரித்து அன்று முழுவதும் உண்ணாவிரதம் இருக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலும் பழமும் தேவைப்பட்டால் சாப்பிடலாம் பச்சரிசி மாவினால் பெண் பொம்மை செய்து மஞ்சள் நூல் மாலை தரித்து குப்பை மேனி செடியை வேருடன் கொண்டு வந்து அலங்கரித்து கறுப்பு வளையல் பாசி மணி கா தோலை இவைகளோடு ஒரு மண்சட்டிக்குள் வைத்து மல்லிகைப்பூ அலங்காரம் செய்ய வேண்டும் சந்தணம் ஜவ்வாது போன்ற வாசனைத்திரவியங்கள் தொளித்து பசு நெய்யால் விளக்கேற்ற வேண்டும் வெற்றிலை பாக்கு பழம் கற்கண்டு இவைகளையும் மடையில் வைக்கவேண்டும்.

வினாயகரை மனதுக்குள் தியானிக்க வேண்டும் அடுத்து ஓம் சிவாயநம என 108 தரம் கூற வேண்டும் அடுத்து ஓம் சக்தி 108 தடவை கூறி வணங்க வேண்டும் ஒவ்வொரு 108 மந்திரம் கூறியதும் கற்பூர தீபாரதனை காட்ட வேண்டும் ஓம் ஐயம் கிலியும் சவ்வும் உவ்வும் சுவாஹா மோகினி மன மோகினி ராகினி ராரா சீக்கிரம் ராரா என ஒருலெட்சம் உருசெபிக்க வேண்டும் கற்பூர தூப தீபம் காட்டி விட்டு வணங்கி எழ வேண்டும் பாலும் பழமும் அருந்திவிட்டு தரையில் வெள்ளை துணி விரித்து பூசை பீடம் மருகே படுத்து தூங்க வேண்டும் ஒன்பதாவது செவ்வாய் கிழமை சித்திரானங்கள் அவல் பொரிகடலை தேங்காய் நிவேதனம் வைத்து வணங்கலாம் ஒன்பதாவது செவ்வாய் கிழமை இறுதியின்போதுமோகினி மிக மிக அழகான பெண் உருவில் வருவாள் அவள் அழகை கண்டு மயங்காமல் அடிபணிந்து தாயே என்னுடன் உறுதுணையாக இருந்து ராஜா வசியம் மக்கள் வசியம் மிருகவசியம் ஆகியவை வெற்றிபெற அருளவேண்டும் என வேண்டிக்கொள்ளவேண்டும் சிர்த்தபடி மறைந்து விடுவாள் சிரிப்புக்கு உனது வேண்டு கோளை ஏற்றுக் கொண்டேன் சர்வ வசியமும் உனக்கு சித்தியாகும் எனும் பொருளாகும்.

- சுபம் -

**மாகாளி அம்மன் மந்திர மாலை முற்றிற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொகுப்பாளர்:

கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org